**கவனிக்க** .- *05.07.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : தொகுதி (III) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1819 - 2013 ජූලි මස 12 වැනි සිකුරාදා - 2013.07.12

*1819 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1668 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1668 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |


**கவனிக்க**.- (i) ஸ்ரீ சித்தார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) கலாசாரம் மற்றும் பண்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கை கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, ஒகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூலை மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# மாகாண சபை அறிவித்தல்கள்

**கொடகவெல பிரதேச சபை**

*கொடகவெல பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட விடயம் சம்பந்தமான அமைச்சரினால் அனுமதிக்கப்பட்ட உள் நிபந்தனைகளை சப்பிரகமுவ மாகாண சபையினால் அங்கீகாரமளிக்கப்பட்டதாக இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 ஆம் பந்தியில் (1) ஆம் அட்டவணையில் சேர்த்து கொள்ளக்கூடிய சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரதேச சபைகளுக்கு கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம் கொடகவெல பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட 2007.03.27 ஆந் திகதி நடைப்பெற்ற அப்பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தின் போது அனுமதிக்கப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (அனுமதித்த ஏற்பாடுகளின்) படி 2 ஆம் பிரிவோடு வாசிக்க வேண்டிய மேற்கூறப்பட்ட பிரதேச சபை சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (II) உப பிரிவின் படி சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2009.03.06 ஆந் திகதியுடைய இல. 1592 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் IV (அ) ஆம் பகுதியில் அறிவிக்கப்பட்ட பொது மக்கள் வாசிகசாலை முறைப்படுத்துதல் வழி நடத்துதல் சம்பந்தமான உள் நிபந்தனைகளில் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வரி அறவிடல் சம்பந்தமான விபரங்கள் கால அறிக்கையைப் பெற்றுக்கொள்ளல் சம்பந்தமான உள்நிபந்தனைகளின் கட்டாக்காலி மிருகங்களினால் ஏற்படும் விபத்துக்களை கட்டுப்படுத்தல், நிர்வகித்தல் சம்பந்தமான சட்டத்தை 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (அமைந்த ஏற்பாடுகளின்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவோடு சேர்த்து வாசிக்கக் கூடிய மேற்கூறிய பிரதேச சபை சட்டத்தின் 125 ஆம் பிரிவின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையினால் 2011.03.22 ஆந் திகதி நடத்தப்பட்ட சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டதன் அறிவித்தல் கிடைக்கும்.*

*மஹிந்த எஸ். வீரசூரிய,*
*செயலாளர்,*
*முதலமைச்சர் அலுவலகம்.*

*சப்பிரகமுவ மாகாணம்,*
*2013.*

*7-324*

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம் - கல்முனை**

**பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் முத்திரையிடப்பட்ட விலைமனு மூலம் விற்பனை செய்வதற்காக மேல் நீதி மன்றத்தினால் கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கோரல் - 2013**

*அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் பகிரங்க விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் விற்பனை செய்யப்பட இருக்கின்றன. இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 2013 ஆடி மாதம் 31 ஆந் திகதி அன்று பி.ப.3.00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*விண்ணப்பங்கள் யாவும் மேல் நீதிமன்ற நீதிபதி, மேல் நீதிமன்றம், கல்முனை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித முகப்பின் இடது பக்க மேல் மூலையில் “ அக்கரைப்பற்று நீதிமன்றத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட வாகனத்திற்கான விலை மனு” எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.*

*கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் மேல் நீதிமன்ற முத்திரை பொறிக்கப்பட்ட மற்றும் கணக்காளரின் கையொப்பம் இடப்பட்ட படிவங்களில் மாத்திரம் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.*

*கேள்விப்பத்திர நடைமுறையூடாக விற்பனை செய்யப்படவுள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் விலைமனுக்கோரும் இறுதித் திகதியில் பி.ப. 3.00 மணிக்கு முன்னர் தமது உறுதிப்படுத்தப்பட்ட உரிமை கோரிக்கையினை முன் வைக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அவை தொடர்பாக எந்த நடவடிக்கையும் ஏற்கப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றோம்.*

மோட்டார் வாகனங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான விலைமனு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதற்காக மீள் செலுத்தப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் நூறு 100 ரூபாவுடன் பின்வரும் அடிப்படையிலான வைப்புப் பணத்தினை செலுத்துதல் வேண்டும். இவ்விண்ணப்பப்பத்திரம் வழங்குதல் 2013, ஆடி மாதம் 31 அன்று மு. ப. 11.30 மணியுடன் நிறுத்தப்படும்.

| தொடர் இலக்கம் | வாகன விபரம் | வகை | விற்பனைக்காக வழங்கப்பட்ட இலக்கம் | வைப்பு கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | வான் வண்டி - 01 | TOYOTA- HIACE | MCA/01/2013 | 10,000 0 |
| 02 | வான் வண்டி - 01 | TOYOTA- KG-LH162V | MCA/02/2013 | 10,000 0 |

குறிப்பிட்ட கால நேரத்திற்குள் பெற்றுக்கொள்ளப்படும் முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஆடி மாதம் 31 அன்று பி. ப. 3.00 மணிக்கு பிரசன்னமான கேள்விமனு சமர்ப்பித்தவர்கள் முன்னிலையில் மேல்நீதிமன்ற சம்பாத்திய குழுவினால் திறக்கப்படும்.

விலை மனுவின் மூலம் கூடிய விலையைக் குறிப்பிட்டு சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு அப்பொருளை விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்தினை மேல் நீதிமன்ற சம்பாத்திய குழு பிறப்பிக்கும். இதனடிப்படையிலான விற்பனை நடைமுறையினை குறிப்பிட்ட நீதிமன்றமான அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் மேற்கொள்ளும்.

விலைமனு கோரலின் ஊடாக விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களை நேரடியாக சமுகமளித்து கடமை நாட்களில் காலை 10.00 மணி தொடக்கம் பி. ப. 2.30 மணி வரைக்கும் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற பதிவாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களுக்கு மதிப்பீட்டுப் பெறுமதி கணிக்கப்பட்டுள்ளதால் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்களில் குறிப்பிட்ட பெறுமதி குறைவானதாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாகனங்களினை விற்பனை செய்வதிலிருந்து நிறுத்தி வைப்பதற்கு நீதிமன்றுக்கு பூரண அதிகாரம் உண்டு.

விற்பனை செய்யப்படும் வாகனம்/வாகனங்களை பணம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். மேலும் எல்லா கொடுப்பனவுகளும் பணமாக செலுத்தப்படுதல் வேண்டும். காசோலைக் கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

| தொடர் இலக்கம் | வழக்கு இலக்கம் | வாகன விபரம் | மாதிரி |
|---|---|---|---|
| 01 | AR/1281/ 08 | வான் வண்டி - 01 | TOYOTA- HIACE |
| 02 | AR/1478/ 08 | வான் வண்டி - 01 | TOYOTA- KG-LH162V |

மேல் நீதிமன்ற ஆணையாளர்,
கிழக்கு மாகாண மேல்நீதிமன்றம்,
கல்முனை.

7-235

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.